**தொம்பே பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 யூன் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தொம்பே பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் விடுவிக்கப்பட்ட 02 நிலையான வைப்புக்களுக்கு உரியதாக கிடைத்த வங்கி வட்டி வருமானம் ரூபா 7,827,367 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ஆதன வரிக்காக வழங்கப்பட்ட கழிவு ரூபா 995,024 தொகை ஆதனவரி கணக்கில் வரவு வைக்கப்பட்டமையினால் ஆதனவரி வருமானம் அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | வேகே உப அலுவலகம் மற்றும் தொம்பே உப அலுவலகத்திற்கு இணைந்த நூலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் முறையே ரூபா 55,225 மற்றும் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 37,725 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | சபையின் 09 கட்டிடங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 4,364,334 மற்றும் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 43,691 பெறுமதியான 02 நீர் தாங்கிகள் என்பன நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | மீளாய்வாண்டில் இரண்டு நிலையான வைப்புக்கள் விடுவிக்கப்பட்டமையினால் கிடைத்த பணமான ரூபா 75,402,367 தொகை மூலதன பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | வியாபார நிலைய வாடகைக்குரிய மேலதிக கட்டணம் ரூபா 355,060 தொகை உரிய வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மிகை கட்டண கணக்கு செலவு வைப்பதற்கு பதிலாக மிகைக் கட்டண கணக்கு வரவு வைக்கப்பட்டு உரிய வருமானக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | திரண்ட நிதியத்தில் ரூபா 180,528,213 தொகை செலவு வைக்கப்பட்ட போதிலும், அதற்குரிய வரவு பதிவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஏ) | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஆண்டின் செலவினம் மற்றும் வருமான கணக்குகளுக்கு இடையே ஏற்பட்ட ரூபா 65,195,450 தொகையான வேறுபாடு இனங்காணப்படாமல் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஐ) | இனங்காண முடியாத ரூபா 851,358 தொகையான கடன்கொடுத்தோர் மீதியொன்று செலவு | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவொன்று இன்றி திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஒ) | 2005 மார்ச் 08 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 178,250 பெறுமதியான கொங்கிரீட் கலவை இயந்திரம் மோட்டார் வாகனமும் வண்டியுமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஓ) | ரூபா 15,180,000 இனங்காணப்படாத மீதியொன்று வருமான செலவின கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஔ) | சேமிப்பு கணக்கிலிருந்து நடைமுறைக் கணக்கிற்கு ஆண்டில் மாற்றப்பட்ட ரூபா 20,000,000 தொகை மூலதன பெறுவனவுகள் பெறுவனவு கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டில் மூலதன பெறுவனவுகள் அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (க) | 2016 முதல் 2019 ஆம் ஆண்டிற்காக மூலதன நிதி உதவியாக ரூபா 87,263,622 தொகை கிடைக்கப்பெற்ற போதும் அது ரூபா 86,384,907 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையினால் ரூபா 878,715 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (கா) | 2019 ஆம் ஆண்டிற்குரிய மூலதன நிதி உதவி வருமானமாக ரூபா 119,354,754 தொகை கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், ரூபா 127,151,366 ஆக கணக்கு வைக்கப்பட்டமையினால் ரூபா 7,796,612 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (கி) | மீளாய்வாண்டின் போது மாகாண சபை வேலைகளுக்காக கிடைக்க | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 8,136,746 தொகை மூலதன நிதி உதவிக் கணக்கிலும் மூலதன செலவின கணக்கிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (கீ) | பயிலுனர் சம்பள பதிவழித்தல் ரூபா 40,000 வேலை கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (கு) | வங்கி வட்டிக்காக அறவிடப்பட்ட வரி பெறுமதி ரூபா 237,562 தொகை வங்கி வட்டி கணக்கின் மூலம் சீராக்கப்பட்டமையினால் வங்கி வட்டி வருமானம் ரூபா 237,562 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (கூ) | மீளாய்வாண்டின் இறுதியில் மீளச் செலுத்த வேண்டிய வைப்புப் பெறுமதி ரூபா 23,296,659 ஆக இருந்த போதிலும் ஐந்தொகையில் ரூபா 26,075,249 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (கெ) | மீளாய்வாண்டில் முன்கொண்டு வரப்பட்ட ஆதனவரி ரூபா 841,429 தொகை ஆதனவரி கணக்கில் சீராக்கப்படாமையினால் அப்பெறுமதியால் நிலுவையாகவிருந்த ஆதனவரி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 05 கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 164,784,464 ஆக இருந்த போதிலும் பட்டோலையின் பிரகாரம் அந்த மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 95,840,977 ஆனமையால் ரூபா 68,943,487 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | பதிவேடுகெள் மற்றும் பட்டோலைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் வேறுபாடுகள் சரிசெய்யப்படும். |

**1.3.3 கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் காணப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 515,216,985 கூட்டுத்தொகையான 08 கணக்குகளுக்காக தேவையான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்வில்லை. | சுட்டிக்காண்பிக்கப்பட்ட கணக்காய்வு சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தற்போது பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படுகின்றது. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2) | 2008 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 82,656 தொகையான முற்பண மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த தொகையை பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) நிதிப் பிரமாணம் 571 | ரூபா 21,058,466 தொகையான 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமானத்தில் செலவு வைப்பதற்காக உரிய பட்டோலைகள் தயாரிக்கப்படும். |

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 02 வருடங்களுக்கும் 03 வருடங்களுக்கும் இடையே ரூபா 4,939,611 கடன்பட்டோர் மீதியொன்றும், 01 வருடத்திற்கு குறைவான ரூபா 56,511,853 தொகையான கடன் பட்டோர்மீதியொன்றும் காணப்பட்டன. | அறவிடவேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதியில் 3 – 5 வருடங்களுக்கு இடையே ரூபா 536,000 தொகை, 2 – 3 வருடங்களுக்கு இடையே ரூபா 8,744,121 மற்றும் 01 வருடத்திற்கு குறைவான ரூபா 73,546,782 தொகை என்பன காணப்பட்டன. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,560,194 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 26,395,978 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை நிதிய பிரதேசத்தில் நிதியம் பிரதேசத்தின் மக்களுக்கு ஆகக் கூடிய நலன்பெறக் கூடிய வகையில் திட்டமிடப்பட்ட செலவிங்களை செய்தல் சபையின் நோக்கமாக இருந்த போதிலும், | திட்டமிடப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அலுவல கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு எதிர்வரும் வருடத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. |

சபைக்குச் சொந்தமான ரூபா 112.23 மில்லியன் பணம் 06 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 17,681,781 | 18,628,628 | 15,504,855 | 3,661,059 | 14,191,940 | 19,427,587 | 16,317,043 | 3,110,544 |
| (ii) | வாடகை | 18,641,340 | 19,970,448 | 19,273,084 | 697,364 | 4,351,800 | 52,725,117 | 52,725,117 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,873,041 | 5,692,833 | 5,692,833 | - | 22,554,540 | 20,501,387 | 20,185,266 | 316,121 |
| (iv) | ஏனைய வருமானம் | 148,108,392 | - | 223,329,043 | - | - | - | - | - |
| | | 189,304,554 | 44,291,909 | 263,799,815 | 4,358,423 | 41,098,280 | 92,654,091 | 89,227,426 | 3,426,665 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ஆதனவரி நிலுவை மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 141,659 தொகை, 5 – 10 வருடங்களுக்கு இடையே ரூபா 106,091 தொகை, 3 – 5 வருடங்களுக்கு இடையே ரூபா 114,189 தொகை மற்றும் 2 – 3 வருடங்களுக்கு இடையே ரூபா 1,287,917 தொகை என்பன காணப்பட்டன. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானம் அறவிடல் திட்ட முறையின் கீழ் ஆதன வரி நடமாடும் சேவை மற்றும் ஆதனங்களை தடை செய்வதன் மூலம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது நிலுவை பணத்திற்காக இறுதி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | **ஆதனவரி மதிப்பீடு திருத்தம்**<br>-----------------------------------------<br>இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் 2017 ஆகஸ்ட் 25 ஆம் திகதிய 1493 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டு வரையிலும் சபையினால் 7308 குடியிருப்பு ஆதனங்களிலும், 2653 வியாபார ஆதனங்களிலும் மற்றும் 768 ஏனைய ஆதனங்களிலும் மாத்திரமே ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | வர்த்தமானியின் பிரகாரம் அறவிட வேண்டிய வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொதுச் சபையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் ஆதன வரியை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) | 2015 ஆம் ஆண்டின் போது இறுதி தடவையாக மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீடு வேகே உப அலுவலகம் மற்றும் பூகொட உப அலுவலகம் என்பவற்றில் 2018 ஆம் ஆண்டின் போதே அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், தொம்பே உப அலுவலகம் மற்றும் கேரகல உப அலுவலகங்களில் 2019 ஆம் ஆண்டின் போதே அமுல்படுத்தப்பட்டிருந்தது. | புதிய வரி மதிப்பீட்டின் பிரகாரம் வருமானங்களை அறவிடுவற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களத்தினால் உரிய மதிப்பீடு வழங்கப்பட்டவுடன் எதிர்வரும் ஆண்டு முதல் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**2.3.3 ஏனைய வருமானம்**
--------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சுற்றுலா வியாபாரத்திற்கான அனுமதிப்பத்திரம்<br>--------------------------------------------------<br>2015 திசெம்பர் 28 ஆம் திகதி 1947/6 ஆம் இலக்க வர்த்தமானியில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உப விதியை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலா வியாபாரம் தொடர்பாக உப விதி | வர்த்தமானியின் பிரகாரம் அனுமதி பத்திரதாரர்களை இனங்கண்டு வருமானத்தை அறவிடுவதற்கு | தற்போது அனுமதிப்பத்திரதார்கள் இனங்கண்டு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 18 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | உரிய உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | 18 விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டுள்ளது. |

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டுள்ள உப விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய 08 இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது வருமானத்திற்காக வருடாந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

#### (இ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 1,724,036 தொகையான மொரஹேன சனசமூக மண்டபத்திற்காக ரூபா 100 இலட்சம் செலவிடப்பட்டிருந்ததுடன் மேலும் நிர்மாணிக்கப்படுகின்றது. | உரிய வேலைகள் குறித்த திகதியில் வேலையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டாவது கட்டத்திற்குரிய மலசல கூட முறைமை மாத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 செப்தெம்பர் 19 ஆம் திகதி LGD/01/D/2019/05 ஆம் இலக்க உள்ளூராட்சி திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் அறவிட வேண்டிய ஆதன கடன் வட்டி ரூபா 278,766 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய கடன் வட்டியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | 15 வருடங்கள் முதல் காணப்படுகின்ற 06 நூலகர் பதவிகள் மற்றும் 02 வருமான பரிசோதகர் பதவிகள் என்பன வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 15 வருடங்கள் முதல் காணப்படுகின்ற 06 நூலகர் பதவிகள் மற்றும் 02 வருமான பரிசோதகர் பதவிகளை உள்ளடக்கிய 08 வெற்றிடங்கள் உள்ளன. |
| (ii) | 2014 திசெம்பர் 19 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்கம் அரச நிர்வாக சுற்றறிக்கையின் படி ஆரம்ப தொகுதியில் 18 பேர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்த போதிலும், முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளருக்கு அறிக்கையிட்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட வேண்டும். | இந்த பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு புறம்பானதாக காணப்படுகின்றது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மண்டாவல கஹடகஹவத்தை பொது மயான நிலம் தனி நபர் ஒருவரினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்பட்டிருந்ததுடன், பூகொட உப அலுவலகத்திற்குரிய பிரதாபக்கந்த பொது மயான நிலத்தின் காணி அளவிடப்பட்டு பிரிக்கப்பட்டிருந்தது. | காணியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் போது அளவிடல் நடவடிக்கைகளை மேற்கொண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | கேரகல மற்றும் பூகொட உப அலுவலகங்களுக்குரிய சபைக்குச் சொந்தமானதாக பதிவேடுகளில் காணப்படுகின்ற பொது காணி கூறுகளின் உரித்துறுதி காணப்படவில்லை. | உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் வெளியீட்டு உரித்துறுதியை தயாரிப்பதற்கு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (இ) | தற்போது பயன்படுத்தப்படாத பொது கிணறுகளை புனரமைப்பதற்காகவும் குறித்த இடங்களை கண்டறிய முடியாத புதுக் கிணறுகளை கண்டறிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 46 மயான நிலங்களுக்காக கையளித்தல் கட்டளை பெறப்படும் வரை பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | மயான நிலங்களுக்காக கையளித்தல் கட்டளையைப் பெற்று பராமரிப்பு நடவடிக்கைளைச் செய்தல் வேண்டும். | அந்த கிணறுகளை ஆய்வு செய்து இனங்கண்டு பட்டோலைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2012 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 11,178,226 பெறுமதியான 02 வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்றல் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | கையேற்பதற்குரிய ஆரம்ப ஆவணங்கள் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. |
| (உ) | ரூபா 92,603,650 பெறுமதியான 36 காணிகள் மற்றும் ரூபா 608,315,000 பெறுமதியான 49 மயான நிலங்கள் என்பவற்றை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | 17 மயான நிலங்களில் 14 இற்காக கையளித்தல் கட்டளை பெற்றுக்கொள்வதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் பிரதேச செயலாளருக்கு அனுப்புவதற்கு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.4.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தொம்பே கொஸ்கஹவத்தை காணியில் நிர்மாணிக்கப்பட்ட உடற்பயிற்சி நிலைய கட்டிடம் உடைந்த நிலையில் காணப்பட்டது. | கட்டிடங்களை அபிவிருத்தி செய்து ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். | அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்ககாக அலுவலக சுற்றாடலாக பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

### 3.4.3 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மெய்மெய்யாய்வு அறிக்கையின் பிரகாரம் 07 வாகனங்கள் பாவனைக்கு பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. | விற்றுத் தீர்த்தல் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏலமிடப்பட்டு விற்றுத் தீர்ப்பதற்காக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

### 3.5 பெறுகை

### 3.5.1 வழங்கல் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த விலையான ரூபா 418 வீதம் கொள்வனவு செய்வதற்கு பதிலாக அதிக விலையான ரூபா 488 வீதம் 23 W மின்குமிழ்கள் 1500 ஐ கொள்வனவு செய்வதற்காக சபைக்கு 105,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆண்டின் ஆரம்பத்தின் மொத்த இருப்பிற்கும் கூறுவிலை கோரப்பட்டிருந்தமையால் அவ்வப் போது கூறுவிலை மாற்றங்களின் பிரகாரம் பெறப்பமடாமல் வீதி விளக்குகளை பெற்றுக் கொண்டதால் நட்டம் அல்லது இழப்பு ஏற்பட்டிருக்கவில்லை. |